# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 1150/மா/2016

ஆணை எண். 131/2017

நாள் : 05/10/2017

திரு ரா. ராஜா, – முறையீட்டு மனுதாரர்
நெ.5, அழகப்பன் தெரு,
ஆற்காடு.

திரு கார்த்திகேயன்
திரு மணிவண்ணன்,
முன்னாள் நகராட்சிப் பொறியாளர்கள்,
ஆற்காடு நகராட்சி, ஆற்காடு. – எதிர் மனுதாரர்கள்

வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சி, எண்.15, அழகப்பன் தெரு முகவரியில் வசிக்கும் திரு ரா. ராஜா அவர்களது 24.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2016 அன்று பெறப்பட்டு, 1150/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக எதிர்மனுதாரர்கள், சாட்சிகள் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டும், வேலூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு அறிக்கைப் பெறப்பட்டும் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சி, எண்.15, அழகப்பன் தெரு முகவரியில் வசிக்கும் திரு ரா. ராஜா என்பவர், ஆற்காடு நகரம், 28-வது வார்டு சாய்பாபா நகர் மனைப்பிரிவு அமைப்பாளர் திரு ப.திருச்செல்வம், அம்மனைப்பிரிவில் அபிவிருத்திப் பணிகளை முறையாக மேற்கொள்ளாததால் ஆற்காடு நகராட்சிக்கு ரூபாய்1.75 கோடி இழப்பீடு ஏற்பட்டுள்ளதென்றும், அதற்குக் காரணமாக இருந்த நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரான திரு ரா. ராஜா அவர்களிடம் 14.12.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. ஆற்காடு சாய்பாபா நகர் மனைப்பிரிவின் உரிமையாளர் பொறுப்பு திரு ப. திருச்செல்வம் பெயருக்கு மாறியவுடன் அபிவிருத்திப் பணிகளுக்கென நகராட்சி மதிப்பீடு செய்திருந்த தொகை ரூபாய் 1.75 கோடி நகராட்சிக்குச் செலுத்தாமலும், நகராட்சி மன்றத்தின் அனுமதி பெறாமலும் சாலை, பூங்கா மற்றும் பிற பொதுப்பயன்பாட்டு நிலங்களை 18.10.2011 நாளிட்ட ஆவண எண்.7350–ன் மூலமாக நகராட்சிக்குத் தானமாக வழங்கியுள்ளார் என்று விசாரணையின்போது குறிப்பிட்டார். மேலும், மேற்குறிப்பிட்ட மனைப்பிரிவு உரிமையாளர் திரு ப. திருச்செல்வம் அவர்களுக்கு உடந்தையாக நகராட்சிப் பொறியாளர் திரு.வெ. கார்த்திகேயன் செயல்பட்டார் என்றும் அவர் தனது அபிவிருத்திப் பணி மதிப்பீடு சுருக்கத்தில் தெரிவித்திருந்த சிறுபாலங்கள் மற்றும் தார்ச்சாலைகள் மனைப்பிரிவில் அமைக்கப்படவில்லை என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், ஆணையாளர் பொறுப்பில் இருந்த நகராட்சி பொறியாளர் திரு க.மணிவண்ணன் அவர்களும் அபிவிருத்தி பணிகள் அனைத்தும் நல்லமுறையில் செய்யப்பட்டுள்ளதாக, 16.08.2016 அன்று சான்று அளித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இம்மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகள் அனைத்தையும் ஆணையர் பொறுப்பில் இருந்த நகராட்சிப் பொறியாளரே நேரடியாக ஆய்வு செய்து அனைத்தும் தரமாக உள்ளதென சான்றளித்துள்ளார் எனவும் கீழ் அலுவலர்கள் தனது பணியை மேலளவு ஆய்வு செய்யவில்லையென்றும் விசாரணையின்போது குறிப்பிட்டார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரும் தனது 30.12.2016 மற்றும் 09.02.2017 நாளிட்ட கடிதங்களில் தனது விரிவான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். இந்நேர்வு சம்பந்தப்பட்ட மனைப்பிரிவு நவாப் ஏரியிலிருந்து 31.6 மீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளதென்றும் 1972 தமிழ்நாடு நகராட்சிகள் கட்டிட விதி 7–ன்கீழ் நீர்நிலைகளிலிருந்து 15 மீட்டர் தொலைவுக்குள் இருந்தால் மட்டுமே அம்மனைப்பிரிவுகளில் கட்டடம் கட்டுவதை தடுக்க இயலும் எனக்குறிப்பிட்டு முறையீட்டு மனுதாரரின் கருத்தினை ஏற்க மறுத்துள்ளார். இம்மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையினரால் தொழில் நுட்ப அனுமதி அதன் முன்னாள் அமைப்பாளர் மற்றும் உரிமையாளர் திரு J. முருகேசன் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில், அவர் ஆவண எண்.7299/2011–ல் திரு ப. திருச்செல்வம் என்பவருக்கு கிரயம் மூலம் உரிமை மாற்றம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதன் அடிப்படையில் அம்மனைத்திட்டப் பிரிவில் உள்ள சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு நிலங்களை 18.10.2011 நாளிட்ட 7350/2011 எண்ணிட்ட ஆவணம் மூலம் திரு ப.திருச்செல்வம் நகராட்சிக்குத் தானமாக வழங்கியுள்ளார் என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளார். தானமாக மேற்குறிப்பிட்ட பொதுப்பயன்பாட்டு நிலங்களை நகராட்சிக்கு வழங்கும் முன் தனக்கு இம்மனைப்பிரிவின் மீதான உரிமை குறித்த ஆவணத்தின் நகலை நகர் மன்றத்திற்கு வழங்காததுடன், பொதுப்பயன்பாட்டு நிலங்களை தானமாக வழங்குவதற்கு முன் அபிவிருத்தி மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1.75 கோடி, நகராட்சிக்குச் செலுத்தி மன்ற ஒப்புதலையும் பெறத்தவறியுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

4. இந்நிலையில், அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கானக் கட்டணம் ரூபாய் 1.75 கோடி செலுத்தினால் மட்டுமே மனைப்பிரிவிற்கு இறுதியான திட்ட அனுமதி ஆணை வழங்க இயலும் என 08.02.2012 நாளிட்ட நகராட்சி ஆணையரின் 5882/2010/எப்.1 எண்ணிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதென்றும், அதனைத் தொடர்ந்து திரு ப. திருச்செல்வம் தனது 23.04.2012 நாளிட்ட கடிதத்தில், மனைப்பிரிவில் குறைபாடாக செய்துள்ள அபிவிருத்திப் பணிகளை நகராட்சியால் நியமிக்கப்படும் மேற்பார்வையாளர் முன்னிலையில் செய்து முடிக்க சம்மதிப்பதாகவும், மின்விளக்குக் கம்பம், நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க உண்டான செலவினை கருவூலத்தில் செலுத்தி விடுவதாக தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். எனினும், தல ஆய்வு செய்த நகராட்சிப் பொறியாளர், அபிவிருத்திப் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்ததைத் தொடர்ந்து, மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு, மனைப்பிரிவில் குறைபாடாக செய்துள்ள அபிவிருத்திப் பணிகளை நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வையில் செய்து

முடிக்கப்படவேண்டும் என 29.05.2012 நாளிட்ட தீர்மானம் எண்.215—ல் முடிவு செய்யப்பட்டது எனவும் ஆணையர் தெரிவித்துள்ளார். இதன் விவரம் 01.06.2012 நாளிட்ட கடிதத்தில் திரு ப. திருச்செல்வத்திற்கு தெரிவிக்கப்பட்டு பணிமுடித்த பின் அதன் விவரத்தினை நகராட்சிக்கு தெரிவிக்குமாறு மேற்படி நபர் பணிக்கப்பட்டுள்ளார். தனது 20.09.2012 நாளிட்ட கடிதத்தில் மின் கம்பங்கள் மற்றும் நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கான தொகை அதிகமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேல்நடவடிக்கைக்காக பொறியியல் பிரிவிற்கு 25.10.2012 அன்று அனுப்பிவைக்கப்பட்டதாகவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. இதனைத் தொடர்ந்து, திரு ப. திருச்செல்வம் அவர்கள் அபிவிருத்திப் பணிகளை செய்து முடித்துவிட்டதாகத் தெரிவித்த நிலையில், நகராட்சிப் பொறியாளர் திரு வெ. கார்த்திகேயன் அவர்கள் தல ஆய்வு செய்து அடிப்படை அபிவிருத்திப் பணிகள் நல்லமுறையில் முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, 25.02.2016 நாளன்று விவரமான அறிக்கையினையும் சான்றினையும் சமர்ப்பித்ததாகக் குறிப்பிட்டார். மேலும், திரு வெ.கார்த்திகேயனுக்குப் பின்பு நகராட்சிப் பொறியாளராகப் பணியேற்ற திரு க. மணிவண்ணன் அவர்களும் மனைப்பிரிவுகளை மீண்டும் ஆய்வு செய்து அபிவிருத்திப் பணிகள் நல்லமுறையில் செய்யப்பட்டுள்ளன என்று 16.08.2016 நாளன்று வழங்கிய சான்றிதழில் தெரிவித்துள்ளார் எனவும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார். பின்னர் நகர் ஊரமைப்புத் துறை, அரசு மற்றும் நகராட்சி வழக்குரைஞர் ஆகியோரின் கருத்தினைப்பெற்றும், திரு ப. திருச்செல்வம் வழங்கிய 18.10.2011 நாளிட்ட தானப்பத்திரம் ஆவண எண்.7350/2011 தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து அதனை இரத்து செய்தும் ஆவண எண்.7350/2011, 31.08.2016 நாளிட்ட புதிய தானப்பத்திரம் எண்.5394/2016 தாக்கல் செய்தும், மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கக்கோரி மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கிடையே, 25.06.2016 அன்று மனைப்பிரிவு அனுமதிக் கட்டணம் ரூ.1,14,000/— மற்றும் ரூபாய் 40,000/—ஐ செலுத்தியும், 220 காலிமனைகளுக்கு காலிமனை வரியாக ரூ.22,03,786/— செலுத்தியும் 17.10.2016 நாளிட்ட கடிதத்தில் திரு ப. திருச்செல்வம் அவர்கள் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கக் கோரினார் எனவும் ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், மேற்குறிப்பிட்ட மனை அமைப்பாளர் மற்றும் உரிமையாளர். மனைப்பிரிவில் அபிவிருத்திப் பணிகள் நகராட்சி மதிப்பீட்டில் செயல்படுத்தத் தவறியதைக் குறித்து புகார்கள் வரப்பெற்றதைத் தொடர்ந்து இன்றுவரை மனைத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர்களான நகராட்சிப் பொறியாளர்கள் திரு வெ. கார்த்திகேயன் மற்றும் திரு க. மணிவண்ணன் மற்றும் நகராட்சி அதிகாரிகள் திரு சா. மணி மற்றும் ச. பழனிவேலு ஆகியோரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. 01.03.2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, மனைப்பிரிவு உரிமையாளர் திரு ப. திருச்செல்வம் அபிவிருத்திப் பணிகளை தானே மேற்கொள்வதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து மன்ற ஒப்புதலுடன் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதென்றும். தன்னால் தலஆய்வு செய்யப்பட்டபோது, பணிகள் தரமாகவும் உறுதியாகவும் இருந்தன என்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்ச்சியாக 3 ஆண்டு காலமாக நடைபெற்றது என்றும், பின்னர் பெய்த மழையால் சில பழுதுகள் ஏற்பட்டன என்று நகராட்சிப் பொறியாளர் திரு வெ. கார்த்திகேயன் விசாரணையின்போது தெரிவித்தார். மற்ற அலுவலர்களும் அதே விவரங்களை ஏற்றுக் கொண்டு வாக்குமூலம் அளித்தனர்.

7. முறையீட்டு மனுதாரர் சாட்சிகளாக குறிப்பிட்டிருந்த திருவாளர்கள் ப.ருத்திரன் மற்றும் சி.சேகர் ஆகிய இருவரிடமும் 22.03.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனைப்பிரிவில் 10 சதவிகிதம் அபிவிருத்திப் பணிகள் கூட நடைபெறவில்லை என்றும் நகராட்சிப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

8. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்து, ஆற்காடு நகராட்சியில் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் 31.05.2006 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி எண்.82/2006–ல் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அம்மனைப்பிரிவிற்கு மன்ற ஒப்புதல் பெற்று இறுதி திட்ட அனுமதி வழங்குவதற்குப் பின்பற்றிய நடைமுறைகளில் கண்டறியப்பட்ட முறைகேடுகள் மற்றும் மனைத் திட்டப்பிரிவு இடம் குறித்த விவரம் வருமாறு :-

(i) பொதுப்பயன்பாட்டு நிலங்களைத் தானமாகப் பெறுவதற்கு பின்பற்றிய நடைமுறை ;

(ii) மனைத்திட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள அல்லது திட்ட மதிப்பீட்டுத் தொகையினை செலுத்துவதற்கான நடைமுறை ;

(iii) அபிவிருத்தித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்ட விதம் மற்றும் குறைபாடுகள் ; மற்றும்

(iv) மனைத்திட்டம் அமைந்துள்ள இடம் குறித்த குற்றச்சாட்டு .

இந்நேர்வு சம்பந்தப்பட்ட மனைப்பிரிவு நவாப் ஏரி என்ற பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிக்கரையில் அமைக்கப்பட்டுள்ளது என முறையீட்டு மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார். இத்திட்ட பகுதி நவாப் ஏரிக்கு 31.6 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதென்றும், கட்டிட விதி 7–ன்படி நீர்நிலைகளிலிருந்து 15 மீட்டர் தொலைவுக்குள் அமைந்தால் மட்டுமே அனுமதி அளிக்க இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, குற்றச்சாட்டினை ஏற்க இயலாது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், இத்திட்டப்பகுதி நகர் ஊரமைப்பு இயக்குநராலேயே தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

9. ஆற்காடு நகரம், வார்டு எண்.D. பிளாக் எண்.15–ல் கண்ட 1/7,8, 2/3 பல்வேறு புல எண்கள் அடங்கிய 18.88 ஏக்கர் நிலம் பரப்பில் வீட்டுமனைத்திட்டம் ஒன்றை ஏற்படுத்த அனுமதி கோரி திரு J. முருகேசன் என்பவர் முறையாக விண்ணப்பம் செய்துள்ளார். அவரது வீட்டுமனைத் திட்டத்திற்கு தொழில் நுட்ப அனுமதி பெற்றவுடன், மேற்படி வீட்டுமனைத்திட்டத்திற்கான நிலங்களை திரு ப. திருச்செல்வம் என்பவருக்கு ஆவண எண்.7299/2011 –ல் கிரய மூலம் உரிமை மாற்றம் செய்து தந்துள்ளார். எனவே, கிரயம் பெற்ற திரு ப. திருச்செல்வம் அவர்களிடமே இத்திட்ட அபிவிருத்திப் பணிகளுக்கான தொகை வசூலிக்கப் படவேண்டும் அல்லது அப்பணிகள் அவராலேயே மேற்கொள்ளப் பட்டிருக்கவேண்டும் 20.02.2002 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.134–ல் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கும், பொதுப்பயன்பாட்டு நிலங்களைத் தானமாகப் பெறுவதற்கும் சில வழி காட்டுதல்களைத் தெரிவித்துள்ளது. அதன்படி" the Executive Authority of the Local Body shall direct the applicant to hand over the open spaces and roads after fully forming them and also to provide all the infrastructural facilities like roads, water supply, drainage and street lights and hand over them to the concerned local bodies after executing necessary Gift Deed.

In case the applicant desires that the work be executed by the local body, he shall remit 100% of the cost as per the estimate in advance "

10. இந்நேர்வு சம்பந்தப்பட்ட மனைத் திட்டப்பிரிவிற்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி ரூபாய் 1.75 கோடி மதிப்பிலான திட்ட மதிப்பீட்டினை அளித்துள்ளது. மேற்படி மதிப்பீட்டுத் தொகையினை மனைத்திட்ட உரிமையாளரிடமிருந்து

பெறாமலும் அல்லது அபிவிருத்திப் பணிகள் மனைத்திட்ட உரிமைதாரரால் மேற்கொள்ளப்படாமலும் இத்திட்டப் பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பொதுப்பயன்பாட்டு நிலங்களை 18.10.2011 நாளிட்ட ஆவண எண்.7350/2011 –ல் நகராட்சித் தானமாகப் பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட தானப்பத்திரத்தில் மனைத்திட்டப் பிரிவு குறித்த பிளாக் எண்ணைத் தவறாகக் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டதால், அத்தானப்பத்திரம் ஆவணம் பின்பு இரத்து செய்யப்பட்டு 31.08.2016 நாளிட்ட தானப்பத்திர ஆவண எண்.5394/2016 பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, தொடக்கத்திலேயே மேற்குறிப்பிட்ட மனைத்திட்ட உடமைதாரரிடம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தானப்பத்திரம் பதிவு செய்தல் குறித்த அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை கடைபிடிக்கத் தவறிய அப்போதைய நகராட்சி ஆணையர் பொறுப்பில் இருந்த பொறியாளர் திரு சா. மணி மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திரு ச. பழனிவேலு ஆகிய இருவருமே பொறுப்பாவார் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

11. மேலும், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகள் குறித்து தல ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்படி வேலூர், நகராட்சிகளில் நிர்வாக மண்டல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதனைத் தொடர்ந்து, குடியிருப்பு மனைப்பிரிவில் செய்யப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் அப்பணிகளின் அளவுகள் மற்றும் அவற்றின் தன்மை குறித்து ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு கீழ்க்காணும் அலுவலர்கள் அடங்கிய குழுவொன்று வேலூர், நகராட்சிகளில் நிர்வாக மண்டல இயக்குநரால் அமைக்கப்பட்டது :-

| | | |
|---|---|---|
| (i) | திரு C. இரவி | நகராட்சிப் பொறியாளர், ஆரணி நகராட்சி |
| (ii) | திரு A. சண்முகம் | நகரமைப்பு அலுவலர், வாணியம்பாடி நகராட்சி |
| (iii) | திரு A. சுபாசினி | உதவிப் பொறியாளர், ஆரணி நகராட்சி. |

மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் அடங்கிய குழுவினர் ஆற்காடு நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உதவியுடன் மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகள் மற்றும் அப்பணிகள் குறித்த அளவுகள் மற்றும் பணியின் தன்மை குறித்து அறிக்கை அளித்துள்ளனர். மேற்குறிப்பிட்ட ஆய்வுக்குழுவின் அறிக்கையின்படி மனைப்பிரிவில் இருபத்துமூன்றடி, முப்பதடி, நாற்பதடி மற்றும் ஐம்பதடி சாலைகள், மனை அமைப்பாளரால் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட அளவு சாலைகளில் 23 அடி சாலை 3 மீட்டர் கூடுதலாகவும்(371–368 மீ), 30 அடி சாலை 144 மீட்டர் கூடுதலாகவும் (1418.5–1274மீ) போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், 40 மற்றும் 50 அடி சாலைகள் முறையே 109 மற்றும் 30 மீட்டர் குறைவாகவே போடப்பட்டுள்ளன. மொத்தத்தில் அனைத்து அளவிலான சாலைகளும் நகராட்சிப் பொறியாளர் (திரு வெ. கார்த்திகேயன்)குறிப்பிட்ட அளவை விட 5.5 மீட்டர் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன.

12. மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட சாலைப்பணிகள் தவிர்த்து, அனுமதிக்கப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், சிறு நிழற்குடை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதுடன் நகராட்சிப் பொறியாளரின் குறிப்பில் காணப்படாத 41 மீட்டர் நீள சுட்டுக்கல் தடுப்புச் சுவரும், 3 மீட்டர் நீள சிறுபாலமும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மனைத்திட்ட அமைப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் கீழ்க்காணும் குறைபாடுகளைக் கண்டறிந்து அதன் விவரங்களை ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர் :-

| | |
|---|---|
| (i) | மழைநீர் வடிகால் பணிகள் நகராட்சிப் பொறியாளர் குறிப்பிட்ட அளவான 4284 மீட்டருக்கு பதிலாக **3999 மீட்டர் குறைத்து 285** மீட்டர் அளவே போடப்பட்டுள்ளது ; |
| (ii) | குழாய் பாலங்கள் 26 எண்ணிக்கைக்குப் பதிலாக 2 பாலங்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன ; |
| (iii) | மேலும், 10 எண்ணிக்கையிலான கேட்வால்வுகளும், 2142 மீட்டர் நீளப் பகிர்மானக் குழாய்களும், 20 எண்ணிக்கையிலான பெயர்ப்பலகைகளும் அமைக்கப் படவில்லை ; |
| (iv) | இருவர் அமரும் ஊஞ்சல், சறுக்குமரம் மற்றும் இருவர் மற்றும் நால்வர் அமரக்கூடிய சீசா அமைக்கப் படவில்லை.; |

எனினும், நகராட்சிப் பொறியாளர் மேற்குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்பட்டுவிட்டதாக தவறான சான்றினை அளித்துள்ளார். சான்றளித்த மேற்குறிப்பிட்டப் பணிகள் இம்மனைத்திட்டப் பிரிவில் மேற்கொள்ளப்படவில்லை என உறுதியாகிறது. முன்னாள் ஆற்காடு நகராட்சிப் பொறியாளர்கள் திரு வெ. கார்த்திகேயன் மற்றும் திரு க. மணிவண்ணன் ஆகிய இருவரும் இம்மனைத்திட்ட அமைப்பாளர் திரு ப. திருச்செல்வத்திற்கு உடந்தையாக இருந்து மனைத்திட்ட அனுமதி பெற உதவியுள்ளனர் என இம்முறைமன்ற நடுவம் உறுதி செய்கிறது. மேலும், இம்மனைத்திட்டப் பிரிவில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டிலான பணியினை முடிப்பதற்குப் பதிலாக குறைந்த மதிப்பீட்டிலான பகுதிப் பணிகளை மட்டுமே மேற்கொண்டுள்ளார் என்றும் ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

13. எனவே, 20.09.2002 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.134–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு மாறாக, மனைத்திட்டப் பிரிவில் அடிப்படை மேம்பாட்டுப் பணிகளை செய்து முடிக்காமலும் அல்லது மேம்பாட்டுப் பணிக்கென மதிப்பீடு செய்யப்பட்ட ரூ.1.75 கோடியை நகராட்சிக்குச் செலுத்தப்படாத நிலையிலும் பொதுப்பயன்பாட்டு நிலங்களை மனைத்திட்ட அமைப்பாளர் திரு ப. திருச்செல்வம் அவர்களிடமிருந்து தானமாகப் பெறுவதற்கு ஆணையர் பொறுப்பில் இருந்த நகராட்சிப் பொறியாளர் திரு சா. மணி மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திரு ச. பழனிவேலு ஆகியோர் செயல்பட்டுள்ளனர். மேலும், மனைப்பிரிவில் குறைந்த மதிப்பீட்டிலான பகுதிப் பணிகளை மட்டுமே முடிக்கப்பட்டிருந்த நிலையில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டிலான மேம்பாட்டுப்பணிகள் நல்லமுறையில் முடிக்கப்பட்டுவிட்டன என சான்றளித்து நகர்மன்றத்திற்கு உண்மையற்ற தகவலினைத் தெரிவித்த நகராட்சிப் பொறியாளர்கள் திரு வெ. கார்த்திகேயன் மற்றும் க.மணிவண்ணன் ஆகியோர் உட்பட மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையரை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக்கொள்கிறது. மேலும், குறைந்த மதிப்பீட்டிலான பகுதிப் பணிகளை மட்டுமே மனை அமைப்பாளர் திரு ப. திருச்செல்வம் மேற்கொண்டுள்ளார். எனவே, நிறைவேற்றப்படாத நிலுவையில் உள்ள மேம்பாட்டுப் பணிகளை முடிக்கும் பொருட்டு, அப்பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையினை நகராட்சிக்குச் செலுத்திய பின்போ அல்லது நிலுவையில் உள்ள பணிகளை மனைத்திட்ட உரிமையாளர் முடித்துக்கொடுத்த பின்போ திட்ட அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கையினை நகர்மன்றம் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், 06.09.2016 நாளிட்ட ஆற்காடு நகரமன்ற தீர்மான எண்.326–ல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, 26.09.2002 நாளிட்ட நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.134–ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் வரியினங்கள் முழுவதும் இந்நேர்வு சம்பந்தப்பட்ட மனைத்திட்டப்பிரிவிற்கு நகராட்சி அனுமதி வழங்கப்பட உள்ள நாள்வரையிலான நிலுவைத்தொகை முழுவதையும் மனைத்திட்ட உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளதா என்பதை நகராட்சி ஆணையர் உறுதி செய்துகொள்ளவேண்டுமெனவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 5–ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். (IXI)

பெறுநர்

1. திரு ரா. ராஜா,
நெ.15, அழகப்பன் தெரு,
ஆற்காடு நகராட்சி, வேலூர் மாவட்டம்.

2. திரு வெ. கார்த்திகேயன்,
நகராட்சி பொறியாளர்,
வாலாஜாபேட்டை நகராட்சி,
வேலூர் மாவட்டம்.

3. திரு க. மணிவண்ணன்,
நகராட்சி பொறியாளர்,
விருத்தாசலம் நகராட்சி,
கடலூர் மாவட்டம்.

4. நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, வேலூர் மாவட்டம்.

5. நகராட்சிகளின் நிர்வாகம் மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம்,

6. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்